**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW2- OS. No. 38/2017**

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு, முத்துக்குமார் | தொழில் : |
| த/பெ. : திரு, சுப்பன்னன் | வயது : 56 |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர். எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது இருப்பிட முகவரியை காட்டுவதற்காக ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.த.சா.ஆ Ex X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3.11.2016 தேதியில் தினந்தந்தி நாளிதழில் கார்பிரரேசன் வங்கி எனது மனைவி மற்றும் பிற கடன்காரர் பெயரில் வழங்கிய ஏல அறிவிப்பு (வரிசை எண் 21 ல் குறிப்பிடப்பட்டுள்ளது)தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.த.சா.ஆ Ex X2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.1 மற்றும் 5ம் பிரதிவாதி தரப்பில் ஏல அறிவிப்பு மனைவி பெயரில் உள்ளதால் அதனை சாட்சி மூலம் குறியீடுசெய்ய இயலாது என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/- M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.